*** 324. வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இ.எஸ்.ஐ. திட்டத்தின்கீழ் திருப்பூர் அரசாங்க மருத்துவமனையில் தற்போதுள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை ஆயிரம் தொழிலாளர்களுக்கு ஏழு படுக்கைகள் என்ற வீதத்தில் அதிகரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) தற்போது இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, திருப்பூர் நகரத்தில் 10,000 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அங்கே இப்போது ஆறு படுக்கைகள் மருத்துவ மனையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த எண்ணிக்கையை அதிகரிக்கும் முறையில், இ.எஸ்.ஐ. மருத்துவமனை கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, திருப்பூர் தொழிலாளர்களுக்காக நலத் திட்டம் ஒன்று ஏற்படுத்தி வைக்கப்பட்டது. இத்திட்டச் சலுகைகள் காப்புறுதி செய்துகொண்ட தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு 2—9—1961 முதற்கொண்டு நீடிக்கப்பட்டது. திருப்பூர் பகுதியில் 1974-75-ம் ஆண்டில் காப்புறுதி செய்துகொண்டவர்களது குடும்பங்கள் மொத்தம் 9,650 ஆகும். இம்மாநிலத்தைப் பொறுத்தவரையில் தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் 1,000 குடும்பங்களுக்கு 11 படுக்கைகள் என்ற அடிப்படையில் உள்ளது. இத் திட்டத்தின் கீழ் காப்புறுதி செய்துகொண்டவர்களுக்கு திருப்பூர் அரசு மருத்துவ மனையில் 11 படுக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

சரக்குகள் போக்குவரத்து நிறுவனம்

*** 325. வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

மாஜி ராணுவத்தினர்களுக்கென லாரி சர்வீஸ் ஒன்று துவக்கிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

1975 நவம்பர் 12]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அண்மையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட லாரி கார்ப்பரேஷனில் 100 லாரிகள் முதலாவதாக ஓட்டத் திட்டமிட்டு அதில் முன்னாள் ராணுவத்தினருக்கும் மட்டும் வேலை வாய்ப்பு அளிக்கத் திட்டமிட்டுள்ளது. தற்போது 40 லாரிகள் சிவில் சப்ளைஸ் இலாகாவில் உணவு தானியங்களை ஏற்றிச் செல்வதில் ஈடுபட்டிருக்கின்றன.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இந்த ரோட் டிரான்ஸ்போர்ட் கார்ப்பொரேஷன் நல்ல முறையில் இப்போது செயல்பட்டு வருகிறது. மத்திய சர்க்கார் இப்போது அகில இந்திய பர்மிட்டுகள் வழங்கப்போவதாகவும், ஒவ்வொரு மாநிலத்திற்கும் 250 பர்மிட்டுகள் வழங்கப்போவதாகவும் பத்திரிகைச் செய்தி வந்திருக்கிறது. அந்தப் பர்மிட்டுகள் இந்த ரோட் டிரான்ஸ்போர்ட் கார்ப்பொரேஷனுக்கு வழங்கப்பட்டிருக்கின்றனவா அல்லது தனியாருக்கு வழங்கப்பட்டிருக்கின்றனவா? மத்திய அரசாங்கத்திடமிருந்து மாநில அரசிற்குத் தகவல் கிடைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, மற்ற மாநிலங்களுக்கு மத்தியில் லாரிப் போக்குவரத்துக்காக 250 பர்மிட்டுகள் இந்த மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கழகம் அதில் எந்த இடத்தில் செலுத்துவது என்று ஆராய்ந்து வருகிறது.

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, இந்த லாரிப் போக்குவரத்துக் கழக லாரிகள் இப்போது சிவில் சப்ளைஸ் இலாகாவில் உணவுப் பண்டங்களை ஏற்றிச் செல்வதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். நேற்று முன்தினம் பத்திரிகையில் உணவுப் பண்டங்களை ஏற்றிச் சென்ற ஒரு லாரியும், டிரைவரும் காணவில்லை என்று செய்தி வந்தது, அது இந்தக் கார்ப்பொரேஷனின் லாரியா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, எனக்குத் தகவல் வராததால், அது கழகத்தைச் சேர்ந்த லாரியாக இருக்க முடியாது.